(8) அறிவிப்பு.

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசப்பெற்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று பகல் சுமார் 1–05 மணிக்கு பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை, திரு. கி. கிருஷ்ணன் அவர்கள் மகன் திரு. கி. வீரமணி என்று சொல்லிக் கொள்பவர் வீசியுள்ளார். அவர் தற்போது பேரவைக் காவலரின் (சார்ஜன்ட்) காவலில் இருக்கிறார். விசாரணையும் நடந்து கொண்டு இருக்கிறது. அவரது செய்கை அவை உரிமை மீறிய செயலாகும். இதைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இது குறித்து மாண்புமிகு கல்வித் துறை அமைச்சரவர்கள் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

9. அரசினர் தீர்மானம்.

(அ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை.

"இன்று (27–3–1979) பகல் சுமார் 1–05 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை பேரவைக்குள்ளே வீசி எறிந்து, உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள கோவை, புளியகுளம், 27, ஆறுமுகம் வீதியிலிருக்கும் திரு. கி. கிருஷ்ணன் மகன் திரு. கி. வீரமணி என்று சொல்லிக் கொள்ளும் நபர், பெரும் குற்றம் புரிந்துள்ளார். அவருடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர் மூன்று நாட்கள் வெறும் காவல் (Simple Imprisonment) தண்டனை அளிக்கப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.